(ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.